# திருவிராமேஸ்வரம்

கலாநிதி என்.கே.எஸ்.திருச்செல்வம்



சிவபூமி இந்து இளைஞர் மன்றம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிராமேஸ்வரம்

**(மன்னார் சிவபூமியில் புதைந்து கிடக்கும் சிவாலயம்)**

**கலாநிதி என்.கே.எஸ்.திருச்செல்வம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிராமேஸ்வரம்

## (மன்னார் சிவபூமியில் புதைந்து கிடக்கும் சிவாலயம்)

கலாநிதி
**என்.கே.எஸ்.திருச்செல்வம் B.A**
வரலாற்றுத்துறை, சென்னை பல்கலைக்கழகம்

வெளியீட்டு அனுசரணை
**சிவபூமி இந்து இளைஞர் மன்றம்**
**மாதோட்டம், மன்னார்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**திருவிராமேஸ்வரம்**
**மன்னார் சிவபூமியில் புதைந்து கிடக்கும் சிவாலயம்**
ஆசிரியர்: என்.கே.எஸ்.திருச்செல்வம்
உரிமை: என்.கே.எஸ்.திருச்செல்வம் ©
வெளியீட்டு அனுசரணை : சிவபூமி இந்து இளைஞர் மன்றம்
மாதோட்டம், மன்னார்
முதல் பதிப்பு: மார்கழி 2022
பக்கங்கள் : 45
அச்சுப் பதிப்பு: குமரன் அச்சகம்
39, 36 வது ஒழுங்கை,
கொழும்பு-06
தொலைபேசி.இல.011-2364550

**Thiruviraameshwaram**
**Mannar Sivaboomiyil Puthainthu Kidakkum Sivalayam**
Author: N.K.S.Thiruchelvam
Copyright: N.K.S.Thiruchelvam ©
Sponsored by: Sivaboomi Inthu Ilainjar Mantram
Maathottam, Mannar
First Edition: December 2022
No of Pages: 45
Printed by: Kumaran Printers
39, 36th Lane, Colombo-06
Tel. 011-2364550

**Price : Rs. 390.00**
**ISBN NO: 978-624-98962-3-9**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூலாசிரியர் எழுதிய நூல்கள்

1. தென்னிலங்கையின் புராதன இந்துக் கோயில்கள்
2. பாரம்பரியமிக்க கதிர்காம பாதயாத்திரையும், கந்தசுவாமிக் கடவுளின் புனித பூமியும்
3. கதிர்காமத்தை தரிசித்த சித்தர்களும், முனிவர்களும்
4. தென்கிழக்கு இலங்கையின் பண்டைய இந்து சமய வரலாறு
5. இலங்கையில் இராவணன் தொடர்பான பிராமிக் கல்வெட்டுக்கள்
6. இந்து சமயம் ஓர் அறிவியல் பொக்கிஷம்
7. புதையுண்டுபோன புராதன இந்துக் கோயில்கள்
8. யார் இந்த இராவணன்?
9. போர்த்துக்கேயர் அழித்த பெந்தோட்டை காளி கோயில்
10. தென்னிலங்கை பிராமிக் கல்வெட்டுகளில் இந்து சமயமும், தமிழும்
11. முன்னேஸ்வரம்-தொன்மையும் வரலாறும்
12. கன்னியா-பண்டைய சைவத் தமிழரின் பாரம்பரிய அடையாளம்
13. கந்தன் கவசங்கள்
14. பண்டைய தமிழ் நூல்களில் சிவன்
15. கபிலித்தை கந்தசுவாமி கோயில்-வரலாறும், மரபுகளும்
16. சிவபூமி-என் உள்ளத்தில் உதித்த கானங்கள்-பகுதி 1
17. திருவிராமேஸ்வரம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளியீட்டுரை

சைவத் தமிழர்களின் பாரம்பரியம் மிக்க அடையாளச் சின்னங்கள் பல அந்நியர்களால் அழிக்கப்பட்டு, மண்ணுக்குள் புதையுண்டு கிடப் பதை நாம் அறிந்துள்ளோம். அத்தகைய பாரம்பரியச் சின்னங்களில் முக்கிய பங்கு வகிப்பவை எமது பண்டைய கோயில்களே. இவ்வாறு இலங்கை முழுவதிலும் எமது பண்டைய கோயில்களின் சுவடுகள் பல மறைந்து கிடக்கின்றன.

இவற்றைத் தேடிக் கண்டு பிடித்து, அவை பற்றிய உண்மைகளை எமக்கு மட்டுமல்லாது, எமது எதிர்கால சந்ததியினருக்கும் அறியத்தரும் உன்னதமான பணியை திறம்படச் செய்யும் சிறந்த வரலாற்று ஆய்வா ளராக, இந்நூலாசிரியர் திரு.என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் விளங்குகிறார்.

தமிழர்கள் அதிகளவில் வாழும் வட மாகாணத்தில் உள்ள எமது மன்னார் மாவட்டத்தில் கடந்த 500 ஆண்டுகளாக மண்ணுள் புதை ந்து, மறைந்து கிடக்கும் இரண்டு கோயில்கள் பற்றிய சில விபங்களை அவர் என்னிடம் தெரிவித்தார். அவர் கூறிய விடயங்களைக் கேட்ட வுடன் ஆச்சரியமாகவும், அதேசமயம் மிகுந்த வேதனையாகவும் இருந் தது. இலங்கை எனும் சிவபூமியின் முக்கிய அங்கமாகத் திகழும், கேதீஸ்வரப் பெருமான் குடிகொண்டிருக்கும் மன்னார் சிவபூமியில் 1500 ஆண்டுகள் பாரம்பரிய பழமை வாய்ந்த ஒரு சிவன் கோயிலும், ஒரு அம்மன் கோயிலும் ஐரோப்பியர்களால் அழிக்கப்பட்டு, இன்று வரை கட்டப்படாமல் மண்ணுக்குள் புதைந்து கிடப்பது மிகவும் கவலையை அளித்தது.

இந்த இரண்டு கோயில்களின் வரலாற்றையும் அவை தொடர்பான சான்றுகளையும் ஒரு நூலாக எழுதி வெளியிட வேண்டும் என நூலா சிரியர் திருச்செல்வம் என்னிடம் கூறியபோது அந்த நூலை எமது சிவபூமி இந்து இளைஞர் மன்றத்தின் ஊடாக வெளியிட வேண்டும் எனும் ஆவல் ஏற்பட்டது. இதற்கு எமது மன்றத்தின் நிர்வாகிகள் அனை வரும் முழுமனதுடன் ஒத்துழைப்பு வழங்கினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்த வகையில் **"திருவிராமேஸ்வரம்- மன்னார் சிவபூமியில் புதைந்து கிடக்கும் சிவாலயம்"** எனும் இந்த அரிய போக்கிஷத்தை வெளியிடுவதில் மன்னார் சிவபூமி இந்து இளைஞர் மன்றம் பெருமை கொள்கிறது.

பல சிரமங்களின் மத்தியில் தான் கொண்ட கொள்கையில் சற்றும் தளராது, போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்ட திருவிராமேஸ்வரம் எனும் இச்சிவாலயம் மீண்டும் கட்டப்பட்டு, எமது பாரம்பரியமும், அடையாளமும் மன்னார் சிவபூமியில் நிலை நிறுத்தப்பட வேண்டும் எனும் நோக்கத்தில், இக்கோயில் பற்றி முழுமையாக ஆய்வுசெய்து, அவற்றை எமக்கு ஒரு வரலாற்று ஆவணமாகக் கொடுக்கும் நூலாசிரியர் கலாநிதி என்.கே.எஸ்.திருச்செல்வம் அவர்களுக்கு எமது சிவபூமி இந்து இளைஞர் மன்றத்தின் சார்பாக மேலான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் எழுத்தப்பட்ட நோக்கம் நிறைவேற திருக்கேதீஸ்வரப் பெருமானை வேண்டுகிறேன்.

**ஓம் நமசிவாய.. சிவாயநம போற்றி.**

**மகாலிங்கம் நடேசானந்தம்**
செயலாளர்
சிவபூமி இந்து இளைஞர் மன்றம்
மாதோட்டம்
மன்னார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அணிந்துரை

## வரலாற்று ஆய்வாளர்களுக்கு நன்கு பரிச்சயமான புலமையாளர்

இலங்கைத் தமிழர் வரலாறு, மதம், பண்பாடு, கல்வெட்டுக்கள் என்பன தொடர்பான அண்மைக்கால ஆய்வுகளால் தமிழ்ச் சமூகத்தால் நன்கு அடையாளப்படுத்தப்பட்ட புலமைமிக்க ஆய்வாளராக கலாநிதி என்.கே.எஸ். திருச்செல்வம் அவர்கள் காணப்படுகின்றார். அவரால் எழுதி வெளியிடப்பட்ட பத்திற்கும் மேற்பட்ட நூல்கள் பிறரது ஆய்வு களின் அணுகு முறைகளோடும், முடிவுகளோடும் முழுமையாக ஒன்றி ணையாது புதிய பல தொல்லியற் கண்டுபிடிப்புக்களையும், தமிழரின் பூர்வீக வரலாறு, பண்பாடு பற்றிய புதிய செய்திகளைச் சொல்வதாகவும் அமைந்திருந்தன. அவற்றை மேலும் வெளிச்சம் போட்டுக்காட்டும் இன்னுமோர் அரிய படைப்பாக தற்போது வெளிவரவிருக்கும் **“திரு விராமேஸ்வரம்- மன்னார் சிவபூமியில் புதைந்து கிடக்கும் சிவாலயம்”** என்ற நூலைப் பார்க்கின்றேன். அத்தகைய ஒரு நூலுக்கு அணிந்துரை வழங்குவது எனக்கு மிகுந்த மனமகிழ்வைத் தருவதாக உள்ளது.

மன்னாரின் வரலாற்றுப் பழமைவாய்ந்த ஆலயங்கள் பற்றி ஒரு நூல் புதிதாக வெளிவரும் போது அது திருக்கேதீஸ்வரர் ஆலயத்தை மையப்படுத்தியதாகவே இருக்கும் என்ற நிலையே கடந்த காலங்களில் காணப்பட்டன. ஆனால் இந்நூலாசிரியர் அவ்வாலயம் பற்றிய சில புதிய செய்திகளுக்கு அப்பால் இதுவரை வரலாற்று வெளிச்சத்திற்கு வெளி வராது மறைக்கப்பட்டிருந்த, மறக்கப்பட்டிருந்த ஓர் ஆலயம் பற்றிய வரலாற்று விடயங்களை வெளிக் கொணர்ந்திருப்பது இந்நூலில் காணப் படும் புதிய விடயமாகும். அவற்றுள் பின்வரும் விடயங்கள் இங்கு சிறப்பாக நோக்கத்தக்கது.

இலங்கையில் பண்டு தொட்டு கடல்சார் தொடர்புகளில் முதன்மை பெற்ற முக்கிய இடமாக மன்னார் மாவட்டமும், அதற்குள் உள்ளட ங்கிய மாதோட்டத் துறைமுகமும் காணப்படுகின்றன. இந்த வரலாற்று உண்மைகளைப் பாளி, சிங்கள, தமிழ் வரலாற்று இலக்கியங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மட்டுமன்றி, 1825 இல் இருந்து 2017 வரை மன்னார் பிராந்தியத்தில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் ஆய்வுகளும் உறுதிப்படுத்துகின்றன. இலங்கையின் பூர்வீக பண்பாட்டு மையங்களில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் கண்டறியப்பட்ட சுதேச பண்பாடுகள், அயல்நாட்டுப் பண் பாடுகளின் செல்வாக்கிற்கு உட்பட்டே அப்பண்பாடுகள் வளர்ந்ததை உறுதிப்படுத்துகின்றன. இந்நிலையில் மன்னார் பற்றிக் கூறும் வரலாற்று இலக்கியங்களும், அம்மாவட்டத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொல்லியல் சான்றுகளும் பலநாட்டு வணிக, கலாசார கடல்சார் தொடர்புகளின் மையமாக அது இருந்தபோதும் அப்பிரதேசத்தில் முதலாவதாக எழுந்த முதன்மை மதமாகவும், பண்பாடாகவும் இந்து மதமே இருந்து வந்ததை உறுதிப்படுத்துகின்றன. இவைபற்றி திரு.திருச்செல்வம் அவர்கள் தனது நூலில் பொருத்தமான இடங்களில் ஆங்காங்கே சுட்டிக் காட்டியிருப்பது இந்நூலுக்குரிய முக்கிய சிறப்பம்சமாகும்.

மன்னாரில் வரலாற்றுப் பழமைவாய்ந்த இந்து ஆலயங்களுடன் பௌத்த ஆலயங்களும், சில இஸ்லாமிய வழிபாட்டிடங்களும் 16 ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையில் மேலாதிக்கம் செலுத்தி வந்த போர் த்துக்கேயரும், பின்வந்த ஒல்லாந்தரும் கடைப்பிடித்த சுதேச மதங்களு க்கு எதிராக கலையழிவுக் கொள்கையால் அழிக்கப்பட்டன என்பது அவர்களின் ஆட்சிக்கால ஆவணங்களில் இருந்து அறியப்படும் உண் மையாகும். இந்நூலாசிரியர் இவற்றின் விளைவால் மன்னாரில் அழிக் கப்பட்ட இந்து ஆலயங்களான திருக்கேதீஸ்வரம், கஜபாகு மன்னன் அமைத்த கண்ணகியம்மன் ஆலயம், சோழர் ஆட்சியில் கட்டப்பட்ட திருவிராமேஸ்வரம், மடுவில் இருந்த அம்மன் ஆலயம் என்பவற்றை அடையாளப்படுத்தி அவற்றின் வரலாற்று உண்மைகள் மண்ணுள் புதைந்து கிடக்கின்றன என்பதற்கு பலதரப்பட்ட வரலாற்றுக் குறிப்புக் கள், ஆவணங்கள், கல்வெட்டுக்கள், மண்ணுக்குள் புதையுண்டிருந்த சிலைகள், சிற்பங்கள், ஆலய அழிபாடுகள் என்பவற்றை ஆதாரங்க ளாகக் காட்டி நிறுவியிருக்கும் அவரது வரலாற்று அணுகுமுறைகள் நூலாசிரியரின் ஆழ்ந்த புலமையை எடுத்துக்காட்டுவதாக உள்ளது.

இந்நூலை ஆக்கியுள்ள கலாநிதி திருச்செல்வம் அவர்கள் ஏற்க னவே எழுதி வெளியிட்ட தரமான நூல்கள் வாயிலாக வரலாற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிஞர்கள் மத்தியில் நன்கு அறிமுகமான ஒருவர். சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றில் கலைமாணிப் பட்டம் பெற்றவர். உலகத் தமிழ் செம்மொழிப் பல்கலைக் கழகத்தினால் கலாநிதி பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்டவர்.

இவர் தனது வாழ்க்கையின் பெரும் பகுதியை இலங்கைத் தமிழர் வரலாற்றை ஆராய்வதற்காகவே அர்ப்பணித்தவர். தனது ஆய்வுப் புலத்தால் இதுவரை ஒன்பது விருதுகளைப் பெற்றவர். இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் முதலான நாடுகளில் நடைபெற்ற வரலாற்றுக் கருத்தரங்குகள் மற்றும் கலந்துரையாடல்களில் பங்கெடுத்தவர். காடு, மலை கடந்து துணிச்சலுடன் பல வரலாற்றுத் தடயங்களைக் கண்டு பிடித்த பெருமைக்குரியவர். அறுபது வயதைக் கடந்த நிலையிலும் இரு பது வயது இளைஞனாக வரலாற்றுப்பணி செய்து வருபவர். அவர் தொடர்ந்தும் தேக ஆரோக்கியத்துடன் இருந்து இலங்கைத் தமிழர் வரலாற்றுக்குப் பணிசெய்ய வேண்டும் என எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சிரேஷ்ட பேராசிரியர் ப.புஷ்பரட்ணம்**
தலைவர்
வரலாற்றுத்துறை
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முன்னுரை

இலங்கையில் பொ.ஆ. 1505ஆம் ஆண்டுக்குப் பின் இங்கிருந்த மிகப்பண்டைய பாரம்பரியமிக்க இந்து மற்றும் பௌத்த மத வழிபாட்டுக்கு மிகப்பெரிய நெருக்கடியும், அழிவும் ஏற்பட்டது. இங்கு வந்த ஐரோப்பியர்களான போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆகியோரின் ஆதிக்க வெறி, அதிகாரம், அடக்கு முறை, அவர்களின் மதத்தை பலவந்தமாகப் பரப்பும் நோக்கம் ஆகியவற்றின் காரணமாக இந்த நிலை ஏற்பட்டது. இலங்கை வரலாற்றிலே யாராலும் ஏற்றுக் கொள்ள முடியாத, தாங்கிக் கொள்ள முடியாத வகையில் இவர்களின் அநியாயங்களும், அடக்கு முறைகளும் தலை விரித்தாடின.

இந்தக் கால கட்டத்தில் தான் ஆயிரம் ஆண்டுகளுக்கு மேல், பரம்பரை பரம்பரையாக நாம் வழிபட்டு, கட்டிக்காத்து வந்த சிவாலயங்கள் உட்பட ஆயிரக்கணக்கான கோயில்கள் அவர்களால் இடித்து அழிக்கப்பட்டன. இவ்வாறு அழிக்கப்பட்ட கோயில்களில் பல இவர்களுக்குப் பின் வந்த ஆங்கிலேயர் காலத்தில் கொஞ்சம் கொஞ்சமாக மீண்டும் கட்டப்பட்டன.

இருப்பினும் அழிக்கப்பட்ட கோயில்களில் சில இன்னும் கட்டப்படாமல் சுமார் 500 ஆண்டுகளாக மண்ணுள் புதையுண்டு கிடக்கின்றன. எமது பாரம்பரிய அடையாளச் சின்னங்களாக விளங்கும் இக் கோயில்கள் மீண்டும் கட்டப்பட்டு, அவ்விடத்தில் எமது அடையாளம் நிறுவப்பட்டு, வழிபாடுகள் நடத்தப்பட வேண்டும் எனும் நோக்கில் இலங்கை முழுவதிலும் புதைந்து கிடக்கும் கோயில்கள் இருந்த இடத்தை அடையாளம் கண்டு, அவை பற்றி ஆராய்ந்து நூல்கள் மூலம் ஆவணப்படுத்திக் கொண்டு வருகிறேன். அந்த வகையில் அனுராதபுரம் மாவட்டத்தில் மட்டும் அழிந்து போன நூற்றுக்கும் மேற்பட்ட கோயில்களை ஆய்வு செய்து நூலாக எழுதியிருந்தேன்.

இவ்வாறு ஆய்வுகள் மேற்கொண்டிருந்த சமயம் தான் தமிழர்கள் அதிகளவில் வாழும் வட மாகாணத்தில் உள்ள மன்னார் மாவட்டத்தில் கடந்த 500 ஆண்டுகளாக மண்ணுள் புதைந்து, மறைந்து கிடக்கும் இரண்டு கோயில்கள் பற்றிய சில விபங்களை அறிந்து கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கோயில்களில் ஒன்று மன்னார் தீவில் அமைந்திருந்த திருவிராமேஸ்வரம் எனும் சிவாலயம். இக்கோயில் 1000 வருடங்களுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டதாகும். இக்கோயில் 16ஆம் நூற்றாண்டில் இங்கு வந்த ஐரோப்பியர்களால் இடித்தழிக்கப்பட்டது.

பண்டைய காலம் முதல் பல சிவாலயங்கள் நிறைந்து காணப்பட்டதால் அறிஞர்களால் "சிவபூமி" எனப் போற்றிக் கூறப்பட்டுள்ள இலங்கைத் திருநாட்டின் முக்கிய சிவத்தலமாகக் காணப்படும் திருக்கேதீஸ்வரம் அமைந்துள்ள மன்னார் மாவட்டத்தில், முற்றிலும் தமிழ் மக்கள் வாழும் பிரதேசத்தில் இந்தக் கோயில் இன்றுவரை மண்ணுள் புதைந்து கிடப்பது மனதிற்கு மிகப் பெரும் வேதனையை கொடுத்தது.

அன்று முதல் இக்கோயிலின் வரலாற்றை ஆய்வு செய்யத் தொடங்கினேன். அப்போது இக்கோயில் பற்றிய பல வரலாற்றுக் குறிப்புகளும், ஆதாரங்களும் கிடைத்தன. இக்கோயிலை மீண்டும் கட்டி எழுப்ப வேண்டும் எனும் நோக்கில் இவ்வாதாரங்களை மையமாக வைத்து ஒரு நூலை எழுத வேண்டும் என எண்ணினேன். அந்த சமயத்தில் உருவானதே **"திருவிராமேஸ்வரம்- மன்னார் சிவபூமியில் புதைந்து கிடக்கும் சிவாலயம்"** எனும் இவ்வாய்வு நூல்.

சுமார் 1000 வருடங்களுக்கு முற்பட்ட பாரம்பரியத்துடன், அழிந்து போய் இன்று மண்ணுக்குள் புதைந்து கிடக்கும் இக்கோயிலை மீண்டும் கட்டி எழுப்புவது இலங்கை வாழ் சைவத்தமிழ் மக்களின் தார்மீக கடமையாகும். இதன் மூலம் அழிந்து போன எமது பாரம்பரிய அடையாளத்தை மீண்டும் கட்டி எழுப்ப முடியும் என்பது உறுதி.

இத்தனை தொன்மைமிக்க வரலாற்றைக் கொண்ட இக்கோயில் பற்றிய நூலை எழுதி முடித்தவுடன் இதற்கான செலவு மற்றும் வெளியீட்டு அனுசரணை தொடர்பாக மன்னாரில் வசிக்கும் நண்பர் நடேசனிடம் கூறியபோது, அவர் அங்கம் வகிக்கும் சிவபூமி இந்து இளைஞர் அமைப்பின் மூலம் நூலை வெளியிட ஆவண செய்வதாகக் கூறி எனக்கு ஊக்கம் அளித்தார். அவரின் ஒத்துழைப்புடன் இந்நூலை வெளியிட்டு வைக்கும் சிவபூமி இந்து இளைஞர் அமைப்பிற்கும், அதன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிர்வாகிகளுக்கும் எனது நெஞ்சார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

எனது பல ஆய்வு நூல்களுக்கு பெருமதிமிக்க அணிந்துரைகளை வழங்கி என்னை ஊக்கப்படுத்தி வரும் பேராசிரியர் பரமு புஷ்பரட்னம் அவர்கள் இந்நூலுக்கும் ஒரு சிறப்பான அணிந்துரையை வழங்கியு ள்ளார். பேராசிரியர் பரமு புஷ்பரட்னம் அவருக்கும் எனது நெஞ்சம் நிறைந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்நூல் வெளிவர பல வகையிலும் ஒத்துழைத்த நண்பர் நடேசன் அவர்களுக்கும் எனது நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கலாநிதி என்.கே.எஸ்.திருச்செல்வம்
(வரலாற்று ஆய்வாளர்)
B.A-வரலாற்றுத்துறை
மார்கழி 2022



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்

**வெளியீட்டுரை ........ 6**

**அணிந்துரை ........ 8**

**முன்னுரை ........ 11**

**இலங்கையின் தொன்மை வாய்ந்த இந்துக் கோயில்களும், அவை அழிக்கப்பட்ட வரலாறும்-ஓர் அறிமுகம் ........ 17**

தமிழ், சிங்கள, பௌத்த மன்னர்களால் கட்டப்பட்ட கோயில்களை இடித்தழித்த ஐரோப்பியர் ........ 17

இந்து சமயத்தை வளர்த்த பௌத்த, சிங்கள மன்னர்கள் ........ 18

பாண்டிய, சோழ மன்னர்களுடன் திருமண உறவு பூண்டிருந்த சிங்கள,பௌத்த மன்னர்கள் ........ 20

தமிழர்களுக்கும் இந்து சமயத்திற்கும் ஆதரவாக இருந்து சிங்கள மன்னர்கள் ........ 21

சைவக் கோயில்களை இடித்தழித்த கிறிஸ்தவ ஆட்சியாளர்கள் ........ 22

தமிழர்களையும், சிங்களவர்களையும் பிரித்து விரோதிகளாக்கிய ஆங்கிலேயர் ........ 23

ஐரோப்பியர்களால் அழிக்கப்பட்டு, மீண்டும் எழுந்த முக்கிய ஆலயங்கள் ........ 24

உசாத்துணை நூல்கள் ........ 25

**மன்னார் சிவபூமியில் இராமர் வழிபட்ட திருவிராமீஸ்வரம் ........ 27**

பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இராமர் ஸ்தாபித்த லிங்கம் ........ 30

இராமேஸ்வரத்தின் எதிர்ப்புறத்தில் அமைக்கப்பட்ட சிவாலயம் ........ 30

மாதோட்டக் கோயில்களை அழித்து கோட்டைகள் கட்டிய போர்த்துக்கேயர் ........ 32



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில் நகரம் மாதோட்டம் ........ 32
மாதோட்டப் பகுதியில் இருந்த மூன்று தொல்லியல் மையங்கள் ........ 33
சோழர் கட்டிய திருவிராமீஸ்வரம் பற்றிய கல்வெட்டு ........ 33
திருவிராமீஸ்வரம் கல்வெட்டு பற்றி பேராசிரியர் பத்மநாதன் ........ 37
திருவிராமேஸ்வரம் கோயில் பற்றிய பேராசிரியர் பத்மநாதனின் குறிப்பு ........ 38
திருவிராமேஸ்வரம் பற்றிய பேராசிரியர் இந்திரபாலாவின் குறிப்பு. 38
திருவிராமேஸ்வரம் பற்றிய ஏனைய தமிழ் அறிஞர்களின் குறிப்புகள் ........ 39
திருவிராமேஸ்வரம் பற்றிய ஆங்கிலேய அறிஞர்களின் குறிப்புகள் 40
கிணறு தோண்டும்போது கிடைக்கப்பெற்ற திருவிராமேஸ்வரத்தின் பரிவார மூர்த்தி ........ 42
திருவிராமேஸ்வரம் ஸ்கந்த புராணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வீரராமேஸ்வரமா? ........ 43
திருவிராமேஸ்வரம் மீண்டும் கட்டி எழுப்பப்பட வேண்டும் ........ 43
உசாத்துணை நூல்கள் ........ 44



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் தொன்மை வாய்ந்த இந்துக் கோயில்களும், அவை அழிக்கப்பட்ட வரலாறும்-ஓர் அறிமுகம்

இலங்கை முழுவதிலும் தொன்மை வாய்ந்த இந்துக் கோயில்கள் பல பண்டைய காலத்தில் அமைக்கப்பட்டு வழிபடப்பட்டுள்ளன. இவற்றில் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு தோற்றம் பெற்ற ஆலயங்கள் சிலவும் உள்ளன. இவற்றில் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், சந்திரசேகர ஈஸ்வரம், நகுலேஸ்வரம், கதிர்காமம், சிவனொளிபாதம், அசுவகிரி சிவாலயம், சிவகிரி சிவாலயம், உகந்தைகிரி சிவாலயம் போன்ற கோயில்கள் முக்கியமானவையாகும்.

இவை தவிர ஆயிரம் வருடங்களுக்கு முற்பட்ட பாரம்பரியம் கொண்ட ஆலயங்கள் பலவும் இதில் அடங்குகின்றன. அதன்பின்பு பொலநறுவை இலங்கையின் தலைநகராக விளங்கிய காலத்தில் சோழர், விஜயபாகு, பராக்கிரமபாகு ஆகியோரின் ஆட்சிக் காலத்திலும் ஏராளமான கோயில்கள் அமைக்கப்பட்டன. தமிழ் மற்றும் பௌத்த மன்னர்கள் கட்டிய நூற்றுக்கணக்கான கோயில்கள் மன்னர்களாலும், சிற்றரசர்களாலும், அரசப் பிரதானிகளாலும் காலத்துக்குக் காலம் மானியங்கள் வழங்கப்பட்டு, புனரமைக்கப்பட்டு பாராமரிக்கப்பட்டு வந்துள்ளன.

## தமிழ், சிங்கள, பௌத்த மன்னர்களால் கட்டப்பட்ட கோயில்களை இடித்தழித்த ஐரோப்பியர்

இவ்வாறு தமிழ், சிங்கள, பௌத்த மன்னர்களால் கட்டப்பட்ட கோயில்கள் யாவும் 16 ஆம், 17ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் இலங்கைக்கு வந்த ஐரோப்பியர்களால் முற்றாக இடித்து அழிக்கப்பட்டன. இவ்வாறு சுமார் 1000 கோயில்கள் அழிக்கப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சில நூற்றாண்டுகளின் பின்பு ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்திலேயே பண்டைய ஆலய இடிபாடுகளும், கோயில்கள் அமைந்திருந்த இடங்களும் அடையாளம் காணப்பட்டு அங்கு மீண்டும் கோயில்கள் கட்டப்பட்டன.

பல ஆலயங்கள் இருந்த இடமே தடம் தெரியாமல் மண்ணுள் புதையுண்டு போய்விட்டன. அழிக்கப்பட்ட ஆலயங்கள் இருந்த இடத்தில் இருந்து அவ்வப்போது புராதன தெய்வச் சிலைகளும், சின்னங்களும் வெளிப்பட்ட வண்ணம் உள்ளன. அந்த வகையில் இன்று நாம் காணும் எமது பண்டைய வரலாற்றைக் கூறும் ஆலயங்கள் எல்லாம் சுமார் 200 வருடங்களுக்குள் மீண்டும் உருவாக்கப்பட்டவையே.

## இந்து சமயத்தை வளர்த்த பௌத்த, சிங்கள மன்னர்கள்

பொ.ஆ.மு 3 ஆம் நூற்றாண்டு காலப்பகுதியில் பொறிக்கப்பட்ட பிராமிக் கல்வெட்டுகளில் சிவவழிபாடு மற்றும் நாக வழிபாடு பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளன. இவை பற்றிய சுமார் 250 கல்வெட்டுக்களை டாக்டர் பரணவிதான பதிவு செய்துள்ளார்.

பொ.ஆ.மு. 4 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த பண்டுகாபய மன்னன் யக்ஷ வழிபாடு மற்றும் சிவ வழிபாடு போன்றவற்றை பேணி வந்தமை பற்றி மகாவம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் தேவநம்பிய தீசன் பௌத்த மதத்தை தழுவுமுன் இசுருமுனியவில் சிவ வழிபாட்டை செய்தவன் ஆவான். இவனது காலத்தில் பிராமண கிராமங்கள் பலவற்றில் கோயில்கள் இருந்தமை பற்றி மகாவம்சம் கூறுகிறது.

பொ.ஆ.மு. 3 ஆம் நூற்றாண்டில் இலங்கையை ஆட்சி செய்த துட்டகைமுனு கதிர்காம முருகன் ஆலயத்தை பெரிதாகக் கட்டியதாக கந்த உபாத்த எனும் நூலில் கூறப்பட்டுள்ளது பொ.ஆ. 2ஆம் நூற்றாண்டில் கஜபாகு மன்னன் சேர நாட்டிற்கு சென்று வந்து இலங்கையின் பல இடங்களில் கண்ணகி அம்மன் கோயில்களை அமைத்தான். இவன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாழ்ப்பாணம், மடு, அனுராதபுரம் ஆகிய இடங்களில் கண்ணகி அம்மன் கோயில்களை அமைத்து வழிபாடு செய்தான். பிற்காலத்தில் இவ்வழி பாடு கிழக்கிலங்கையில் செல்வாக்குப் பெற்று விளங்கியது.

சோழர் காலத்தின் பின்பு பொலநறுவையை தலைநகராகக் கொண்டு இலங்கையை ஆட்சி செய்த விஜயபாகு பல இந்துக் கோயி ல்களை கட்டியது பற்றி சூளவம்சமும், அம்மன்னனால் பொறிக்கப்பட்ட கல்வெட்டுகளும் கூறுகின்றன. மேலும் 2 ஆம் விக்ரமபாகு, முதலாம் தப்புலன், 2 ஆம் மகிந்தன் ஆகிய பொலநறுவை மன்னர்கள் இந்துக் கோயில்களை கட்டியது பற்றி சூளவம்சம் குறிப்பிடுகிறது. மானாபரணன் எனும் மன்னன் தெவிநுவர விஷ்ணுவை வழிபட்டு வந்தான் என சூள வம்சம் மேலும் கூறுகிறது.

பொ.ஆ. 11ஆம் நூற்றாண்டில் பொலநறுவையில் இருந்து ஆட்சி செய்த முதலாம் பராக்கிரமபாகு 79 இந்து ஆலயங்களை புனரமைத்த துடன் 13 கோயில்களை புதிதாக அமைத்தான் எனவும், அழிந்துபோன 24 கோயில்களை மீண்டும் கட்டினான் எனவும் சூளவம்சம் கூறுகிறது. இதன்படி மொத்தமாக 116 இந்து கோயில்களுக்கு அவன் திருப்பணி களை மேற்கொண்டுள்ளான் எனத் தெரிகிறது. இலங்கையை ஆட்சி செய்த மன்னர்களில் அதிகமான கோயில்களைக் கட்டிய மன்னன் இவனே என்பது குறிப்பிடத்தக்கது.

மன்னன் நிசங்கமல்லன் இராமேஸ்வரம் ஆலயத்தை திருத்தி அமைத்ததோடு, நிசங்க மகேஸ்வரன் என்னும் கோயிலையும் அங்கு அமைத்ததாக இலங்கை பல்கலைக்கழக வெளியீடான History of Ceylon எனும் நூலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தம்பதெனியாவை தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த 3ஆம் விஜயபாகு மன்னன் தெவிநுவர விஷ்ணு ஆலயத்தை புனரமைத்த தோடு, பெந்தோட்டையில் ஒரு காளி கோயிலை கட்டியதாக சூளவம் சமும், ரோயல் ஆசியா கழகக் குறிப்புகளும் கூறுகின்றன. மேலும் 2ஆம் பராக்கிரமபாகு கோயில்களைக் கட்டியமை பற்றியும் சூளவம்சம் கூறுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4 ஆம் விஜயபாகு இந்துக் கோயில்களுக்கு ஆற்றிய பணிகள் பற்றிய வரலாற்று குறிப்புகள் உள்ளன. முதலாம் சேனன் சைவசமய பணிகள் செய்தது பற்றி நிக்காய சங்கராவ எனும் நூலில் குறிப்பிடப் பட்டுள்ளது. மேலும் 4 ஆம் பராக்கிரமபாகு, நான்காம் புவனேகபாகு, மூன்றாம் விக்கிரமபாகு, 5 ஆம் புவனேகபாகு போன்ற மன்னர்கள் இந்துக் கோயில்களைக் கட்டினர் என ரோயல் ஆசியாக் கழகக் குறிப் புகள் கூறுகின்றன.

சீதவாக்கையை ஆட்சி செய்த முதலாம் இராஜசிங்கன் 100 க்கும் மேற்பட்ட பத்தினி அம்மன் கோயில்களை தென்னிலங்கையில் அமை த்தான் என வரலாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

கோட்டை மன்னன் 6ஆம் பராக்கிரமபாகு முன்னேஸ்வரம் சிவன் கோயிலைத் திருத்தி அமைத்ததோடு,தனது இராச்சியத்தில் பல இந்துக் கோயில்களை கட்டியது பற்றி ரோயல் ஆசியாக் கழகக் குறிப்புகள் கூறுகின்றன. மேலும் சந்தேச நூல்களும் இவ்விபரங்கள் பற்றிக் கூறு கின்றன.

இவ்வாறு காலம் காலமாக இலங்கை சிங்கள, பௌத்த மன்னர் களின் ஆதரவையும், போஷிப்பையும் பெற்று வந்தது இந்து சமயம் என்பது குறிப்பிடத்தக்கது.

## பாண்டிய, சோழ மன்னர்களுடன் திருமண உறவு பூண்டிருந்த சிங்கள,பௌத்த மன்னர்கள்

தென்னிந்தியாவை சோழ, பாண்டிய மன்னர்கள் ஆட்சி செய்த காலத்தில் இவர்களுக்கிடையில் ஒற்றுமை இருக்கவில்லை. ஒருவர் மற்றவருடன் போர் செய்த வண்ணமே இருந்தனர். அக்காலகட்டத்தில் இலங்கையில் இருந்த சிங்கள மன்னர்கள் சோழ, பாண்டிய மன்னர் களுடன் திருமண உறவு பூண்டிருந்தனர். உள்நாட்டில் கிளர்ச்சி, புரட்சி போன்றவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் தென்னிந்தியாவிலிருந்து சோழர் அல்லது பாண்டியர் படைகளும் இலங்கைக்கு வந்து இலங்கை மன்னனின் படைகளுடன் சேர்ந்து கிளர்ச்சிகளை முறியடித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோழ மன்னனின் இளவரசியை இலங்கை சிங்கள மன்னர்கள் மணமுடித்து, அவர்களுடன் உறவை ஏற்படுத்தி,ஆட்சி செய்து கொண்டிருக்கும் சமயத்தில், இலங்கையில் ஆட்சி செய்யும் மன்னனுக்கு எதிராக செயல்படும் எதிரி மன்னனுக்கு ஆதரவாக பாண்டியர் இலங்கை மன்னனுடன் போர் தொடுத்து, அவனைத் தோற்கடித்து எதிரி மன்னன் ஆட்சி செய்ய உதவி புரிந்துள்ளனர். இலங்கை மன்னர்கள் பாண்டிய மன்னனுடன் திருமண உறவு கொண்டு ஆட்சி செய்யும் காலத்தில் சோழர் தமது படைகளை இலங்கைக்கு அனுப்பி அவனை வென்று எதிரி மன்னன் ஆட்சி அமைக்க அனுசரணையாக இருதுள்ளனர்.

## தமிழர்களுக்கும் இந்து சமயத்திற்கும் ஆதரவாக இருந்து சிங்கள மன்னர்கள்

தென்னிந்தியாவில் சோழ,பாண்டிய மன்னர்களுக்கிடையே இருந்த பகைமை உணர்வு இலங்கையிலும் எதிரொலித்தது என்பதை இலங்கை வரலாற்று நூல்களும் கூறுகின்றன. மொத்தத்தில் இலங்கை மன்னர்கள் அனைவரும் சோழர் அல்லது பாண்டியருடன் உறவு பூண்ட வண்ணமே தமது ஆட்சியை மேற்கொண்டுள்ளனர்.

எனவே இலங்கை சிங்கள மன்னர்களிடையே தமிழின எதிர்ப்போ, இந்து சமய எதிர்ப்போ இருந்ததில்லை. சோழரை அல்லது பாண்டியரை எதிர்த்தார்களேயன்றி தமிழர்களை எதிரியாக சிங்கள மன்னர்கள் கருதவில்லை. இந்து கோயில்களை சிங்கள பௌத்த மன்னர்கள் இடித்து அழித்ததில்லை. மாறாக பல இந்துக் கோயில்களை சிங்கள பௌத்த மன்னர்கள் கட்டினார்கள் என்பதே உண்மை. இவ்வுண்மையை மகாவம்சம், சூளவம்சம் போன்ற நூல்கள் மூலம் அறியக் கூடியதாக உள்ளது.

மகாசேனன் எனும் மன்னன் கிழக்கில் மூன்று சிவாலயங்களை அழித்தான் என மகாவம்சம் குறிப்பிடும் ஒரே ஒரு சம்பவத்தைத் தவிர வேறு எந்த இந்துக் கோயில்களும் சிங்கள மன்னர்களால் அழிக்கப்பட்டதாக வரலாற்றில் கூறப்படவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதே சமயம் மகாசேனன் சைவக் கோயில்களை மட்டும் அழிக்கவில்லை. வைதூலிய சமயத்தை பின்பற்றிய மகாசேனன் சங்கமித்ரன் எனும் பிக்குவின் உதவியுடன் அனுராதபுரத்தில் இருந்த முதன்மையான பௌத்த தலமான மகாவிகாரையையும், ஏழு தள பௌத்த கட்டிடமான லோவமஹாபாயவையும் அழித்து, இவற்றின் தூண்களைக் கொண்டு அபயகிரி விகாரையைக் கட்டினான் என மகாவம்சம் கூறுகிறது.

ஆனால் மட்டக்களப்பு மான்மியம் மகாசேனன் பற்றிய வேறொரு தகவலைக் கூறுகிறது. மகாசேனன் தட்சிணாபதி எனும் திருக்கோணேஸ்வரத்தை புனரமைத்தான் எனவும், பல பௌத்த ஆலயங்களை இடித்தான் எனவும், பின்பு ஆடகசவுந்தரியை மணம் முடித்த பின் ஜெத்ததீசனின் உதவியுடன் தான் இடித்த பௌத்த ஆலயபகளை புனரமைத்ததோடு, ஒவ்வொரு பௌத்த ஆலயத்தின் அருகிலும் ஒரு முருகன் கோயிலைக் கட்டினான் எனவும் மட்டக்களப்பு மான்மியம் கூறுகிறது. இதன்படி கிழக்கில் மூன்று சிவாலயங்களை இடித்தான் எனக் கூறப்படும் மகாசேனன் தமிழர்களுக்கு எதிரானவன் அல்ல என்பது தெளிவாகத் தெரிகிறது.

## சைவக் கோயில்களை இடித்தழித்த கிறிஸ்தவ ஆட்சியாளர்கள்

மேலே கூறப்பட்டுள்ள விபரங்களின்படி தமிழ் மன்னர்களும், சிங்கள மன்னர்களும் கட்டிக்காத்து வந்த இந்து கோயில்களை இடித்து அழித்தவர்கள் கிறிஸ்தவ ஐரோப்பியர்களே. 1505ஆம் ஆண்டு இலங்கைக்கு வந்த போர்த்துக்கேயர் தமது கத்தோலிக்க மதத்தைப் பரப்பும் நோக்கில் பிரசித்திபெற்ற இந்து கோயில்களை இடித்து தரைமட்டமாக்கினர். களனி விகாரை போன்ற பல முக்கிய பௌத்த ஆலயங்களையும் போர்த்துக்கேயர் அழித்தனர். யாழ்ப்பாணத்தில் மட்டும் 500 கோயில்களை தாம் அழித்ததாக போர்த்துக்கேய தளபதி போர்த்துக்கல் மன்னனுக்கு கடிதம் எழுதி அனுப்பியுள்ளான்.

போர்த்துக்கேயர் தமது கத்தோலிக்க மதத்தை தமிழர்களிடையே பரப்பவும், தமக்கு பாதுகாப்பாக கோட்டைகளை அமைக்கவும் இந்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயில்களை இடித்து அழித்தனர். இவர்களின் ஆக்கிரமிப்பையும், ஆராஜகத்தையும் கோட்டை, சீதாவாக்கை, கண்டி, யாழ்ப்பாணம் ஆகிய இராச்சியங்களில் இருந்த சிங்கள-தமிழ் மன்னர்கள் கூட்டாக எதிர்த்துப் போராடினர். மேற்குறிப்பிட்டுள்ள கோயில்கள் அழிப்பு பற்றியும், போர்த்துக்கேயர் எமக்குச் செய்த அநியாயங்களும், அராஜகமும் எத்தனை கொடூரமானது என்பது பற்றியும் போர்த்துக்கேய பாதிரியாரான குவைரோஸ் என்பவர் தான் எழுதிய "The Temporal and Spritual Conquest of Ceylon" எனும் நூலில் விபரமாகக் குறிப்பிட்டுள்ளார்.

போர்த்துக்கேயருக்குப் பின் இலங்கை வந்த ஒல்லாந்தர் அவர்களுக்கு போட்டா போட்டியாக தமது கத்தோலிக்க புரட்டஸ்தாந்து மதத்தை பரப்பும் நோக்கில் எஞ்சியிருந்த சிறிய கோயில்களையும் முற்றாக அழித்தனர். இவ்விரு அந்நியர் காலத்திலும் இந்துக்கள் தமது கடவுள்களை வணங்க முடியாதவர்களாய் இருந்தனர். போர்த்துக்கேயத் தளபதியான பிலிப் தி ஒலிவேரா என்பவன் கத்தோலிக்க கிறிஸ்தவ சமயமே மெய்ச்சமயமென்றும், மற்ற சமயங்கள் பிசாசு வணக்கம் உடையவை எனவும் பிரசங்கம் செய்து தமிழர்களை ஆயுதமுனையில் பயமுறுத்தி, யாழ்ப்பாணத்தில் 52 ஆயிரம் தமிழர்களை கிறிஸ்தவர்களாக மாதம் மாற்றினான். கோயில்கள் இருந்த இடங்களில் கிறிஸ்தவ தேவாலயங்கள் அமைக்கப்பட்டன.

## தமிழர்களையும், சிங்களவர்களையும் பிரித்து விரோதிகளாக்கிய ஆங்கிலேயர்

போர்த்துக்கேயர், ஒல்லாந்தரை அடுத்து இலங்கைக்கு வந்த ஆங்கிலேயர் காலத்தில் இங்கு கிறிஸ்துவ மதம் பரவியிருந்தது. எனவே மதமாற்றத்தில் இவர்கள் பெரிதாக நாட்டம் காட்டவில்லை. ஆனால் அதைவிட மிக மோசமான சூழ்ச்சி ஒன்றை மேற்கொண்டனர்.

இலங்கை வரலாறு எழுதப்பட்டிருக்கும் பாளி நூல்களை மொழிபெயர்க்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இந்திய வேத நூல்களை மொழிபெயர்ப்பதாகக் கூறி வட இந்தியர்களை ஆரியர் எனவும், தென்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

னிந்தியர்களை திராவிடர் எனவும் மாக்ஸ்முல்லர் போன்ற பாதிரியார் கள் பிரித்தது போல ஒற்றுமையாக இருந்த தமிழ், சிங்கள மக்களை பிரித்தாளும் சூழ்ச்சியை இவர்கள் மேற்கொண்டனர். அந்த வகையில் இலங்கை மக்களிடையே பிரிவினை எனும் நஞ்சை விதைத்தனர். சிங் களவரை ஆரியர் எனவும், தமிழரை திராவிடர் எனவும் கூறி இலங்கை மக்களை பிளவு படுத்தினர். அன்றிலிருந்துதான் தமிழர், சிங்களவர் இடையே விரோதப் போக்கு உருவானது.

ஒற்றுமையாக இருக்கும் மக்களை பிரித்தாளும் கொள்கை கொண்ட பிரித்தானியர், அதாவது ஆங்கிலேயர் எம்மிரு இனங்களை யும் பிரித்து ஒருவருக்கொருவர் எதிரிகளாக பார்க்கும் நிலையை உரு வாக்கினர். அந்த நிலை வளர்ந்து இன்று விஸ்வரூபம் எடுத்துள்ளது.

இலங்கை வரலாற்றை புரட்டிப்பார்த்தால் சிங்கள, பௌத்த மன் னர்கள் தமிழ் மக்களுடன் நல்லுறவைப் பேணியதோடு இந்து சமயத் திற்கும் ஆதரவாக இருந்தமையும், ஐரோப்பிய கிறிஸ்தவர்கள் தமிழர் களுக்கு எதிரிகளாக இருந்ததோடு ஆயிரக்கணக்கான கோயில்களை இடித்து தரைமட்டமாக்கி, அப்பாவி இந்துக்களை மதம் மாற்றி, இந்து சமயத்தை அழித்து, தமிழ் சிங்கள நல்லுறவில் பகைமையை ஏற்படுத்தி ஒருவருக்கொருவரை விரோதிகளாக்கி உள்ளமையும் தெளிவாக தெரியும்.

## ஐரோப்பியர்களால் அழிக்கப்பட்டு, மீண்டும் எழுந்த முக்கிய ஆலயங்கள்

போர்த்துக்கேயர் மற்றும் ஒல்லாந்தர் ஆகியோர் இலங்கையில் சுமார் 1000 கோயில்களை அழித்துள்ளனர். பிரசித்தி பெற்ற சைவத் திருத்தலங்களான நகுலேஸ்வரம், நல்லூர் கந்தசுவாமி கோயில், வியா வில் அய்யனார் கோயில், திருக்கேதீஸ்வரம், திருவிராமேஸ்வரம், மடு கண்ணகி அம்மன் கோயில், திருக்கோணேஸ்வரம், முன்னேஸ்வரம், சீதாவாக்கை சிவன் கோயில், பெந்தோட்டை காளி கோயில், காலி சிவன் கோயில், திருக்கோயில் முருகன் கோயில், தெவிநுவரை விஷ்ணு கோயில், தெவிநுவரை சந்திரசேகர ஈஸ்வரம், கோட்டை இராச்சியத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்த சுமார் 8 கோயில்கள் உட்பட பல கோயில்கள் இவற்றில் உள்ளடங்குகின்றன.

இக்கோயில்களில் நகுலேஸ்வரம், நல்லூர் கந்தசுவாமி கோயில், வியாவில் அய்யனார் கோயில், திருக்கேதீஸ்வரம், திருக்கோணேஸ் வரம், முன்னேஸ்வரம், காலி சிவன் கோயில், திருக்கோயில் முருகன் கோயில், தெவிநுவரை விஷ்ணு கோயில் ஆகிய கோயில்கள் மீண்டும் கட்டப்பட்டன.

அதேசமயம் நாற்திசைக் கோயில்களில் ஒன்றான சந்திரசேகர ஈஸ்வரம் உட்பட முக்கிய கோயில்களான திருவிராமேஸ்வரம், மடு கண்ணகி அம்மன் கோயில், சீதாவாக்கை சிவன் கோயில், பெந் தோட்டை காளி கோயில் போன்ற கோயில்கள் மீண்டும் கட்டப் படவில்லை என்பது உற்று நோக்கத்தக்கது.

## உசாத்துணை நூல்கள்


1. The Temporal and Spritual Conquest of Ceylon- By Rev. Fernao de Queyroz- Asian Educational Services- New Delhi- Madras- 1992- First Published Colombo, 1930

2. The Mahavamsa- Wilhelm Geiger-Madras-New Delhi- 1993- XXV-72, 73, 74- Page. 175

3. The Mahavamsa- Wilhelm Geiger-Madras-New Delhi- 1993- XXXVII- 9,10,11,12,41- Page. 268, 270

4. The Culavamsa- Wilhelm Geiger-Madras-New Delhi- 2003- LXXIX- 19,22,81- Page. 117, 123

5. Monarch of Lanka- Premasiri Mahingoda- Colombo-2006- Page. 66




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. Kanda Upatha

7. மட்டக்களப்பு மான்மியம்- F.X.C.நடராஜா- மட்டக்களப்பு- 1998- பக். 38, 39

8. மட்டக்களப்பு மான்மியம் ஓர் ஆராய்ச்சி- தனபாக்கியம் குணபாலசிங்கம்- மட்டக்களப்பு- 1993- பக். 70



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன்னார் சிவபூமியில் இராமர் வழிபட்ட திருவிராமீஸ்வரம்


இலங்கையின் வடமாகாணத்தில் உள்ள மாவட்டங்களில் ஒன்றே மன்னார் மாவட்டமாகும். இது இலங்கையின் வட மேற்குப் பக்கத்தில் அமைந்துள்ளது. பண்டைய காலம் முதல் சிவபூமியாக விளங்கிய இல ங்கைத் தீவின் முக்கிய நாற்திசை சிவன் கோயில்களில் ஒன்றான திருக்கேதீஸ்வரம் உட்பட திருவிராமீஸ்வரம் ராஜராஜேஸ்வரம், தண் டேஸ்வரம் ஆகிய சிவாலயங்கள் இம்மாவட்டத்திலேயே அமைந்திரு ந்தன.

இம்மாவட்டத்தின் தலைநகராக மன்னார் நகரம் விளங்குகிறது. இந்நகரம் மன்னார் தீவின் கிழக்கு முனையில் அமைந்துள்ளது. மன்னார் தீவு 30 கி.மீ நீளமும், 6.5 கி.மீ அகலமும், கிழக்கு மேற்காக நீண்டும், வடக்கு தெற்காக ஒடுங்கியும் காணப்படும் தீவாகும்.

இத்தீவு பெருநிலப்பரப்பில் இருந்து சுமார் 4கி.மீ மேற்கில் அமை ந்துள்ளது. தீவிற்கும், பெருநிலப்பரப்பிற்கும் இடையில் காணப்படும் கடல் பரப்பு ஆழம் குறைந்ததாக இருந்தபடியால், பண்டைய காலம் முதல் இலங்கையின் முக்கிய துறைமுகமாக விளங்கியது. இத்துறைமுகம் மாந்தை எனவும், துறைமுகத்தை அண்டிய நகரம் மாதோட்டம் எனவும் அழைக்கப்பட்டது. கிரேக்கர், ரோமானியர், அரேபியர், சீனர் ஆகிய வெளிநாட்டவர் மாந்தை துறைமுகத்தின் ஊடாக வர்த்தக நடவடிக்கை களில் ஈடுபட்டு வந்தனர். இத்துறைமுகத்தின் கிழக்கில் பெருநிலப்பரப் பும், மேற்கில் மன்னார் தீவுப் பகுதியும் அமைந்திருந்தன. துறைமுகத்தை அண்டிய கிழக்கு மற்றும் மேற்குப் பகுதிகளில் கோயில்கள் அமைக்கப் பட்டு வழிபடப்பட்டன. பிற்காலத்தில் துறைமுகத்தின் மேற்குப் பகுதியில் முக்கியத்துவம் வாய்ந்த இடத்தில் போர்த்துக்கேயர் தமது கோட்டையைக் கட்டியுள்ளனர். இதுவே மன்னார்க் கோட்டையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





மன்னார் மாவட்டத்தில் திருவிராமேஸ்வரத்தின் அமைவிடத்தைக் குறிக்கும் தேசப்படம்



பண்டைய மாந்தை துறைமுகம் அமைந்திருந்த கடல் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



மாதோட்டம் துறைமுகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த மேற்குப் பகுதியில் போர்த்துக்கேயர் கட்டிய மன்னார் கோட்டை



மன்னார் தீவின் ஒரு பகுதி-மாதோட்டம் துறைமுகத்தின் முக்கியத்துவம் வாய்ந்த மேற்குப் பகுதி. படத்தின் வலது பக்கத்தில் போர்த்துக்கேயர் கட்டிய கோட்டை காணப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இராமர் ஸ்தாபித்த லிங்கம்

சீதையை மீட்பதற்காக இந்தியாவிற்கும், இலங்கைக்கும் இடையே வானரப் படைகளின் உதவியுடன் "நளசேது" எனும் இராமர் பாலத்தை இராமர் அமைத்தாக இந்தியாவின் புகழ் பெற்ற இதிகாசமான இராமாயணம் கூறுகிறது. பாலத்தை அமைப்பதற்கு முன் இந்தியாவின் தென்கரையில் இராமேஸ்வரம் எனும் தீவில் சிவலிங்கத்தைப் பிரதிஸ்டை செய்த இராமர் தனது முயற்சி வெற்றியடைய வேண்டும் என வேண்டி பூஜை செய்து வணங்கினார். பாலத்தைக் கட்டி முடித்து இலங்கைக் கரையை வந்தடைந்ததும் தனது வேண்டுதலை நிறைவேற்றிய சிவனை நினைத்து இக்கரையில் சிவனை வணங்கிப் பூஜை செய்தார்.

## இராமேஸ்வரத்தின் எதிர்ப்புறத்தில் அமைக்கப்பட்ட சிவாலயம்


இந்தியாவில் உள்ள இராமேஸ்வரம் தீவில் இருந்து மன்னார் தீவு வரையான கடல் பகுதியில் பாலம் அமைத்தே இராமர் இலங்கைக்கு வந்ததாக இராமாயணம் கூறுகிறது. அவ்வாறு இராமரால் வழிபடப்பட்ட லிங்கமே திருவிராமேஸ்வரம் எனப் பெயர் பெற்றதாகக் கூறப்படுகிறது. இது திருவிராமீஸ்வரம் எனவும் அழைக்கப்பட்டது.

தென்னிந்தியாவிலுள்ள புகழ்பெற்ற சிவாலயமான இராமேஸ்வரத்தின் எதிர்ப்புறத்தில் அமைந்திருந்ததால் இதற்கு திரு+வி+ராமேஸ்வரம் என்ற பெயர் உண்டானது. "திரு" என்பது புனிதத்தையும், "வி" என்பது எதிர் அல்லது இன்னொன்று என்பதையும் குறிப்பதாகும். இவ்வாலயம் திருவிராமீஸ்வரம் உடையார் கோயில் எனவும் அழைக்கப்பட்டுள்ளது. இவ்வாலயம் மாதோட்டத்தில் திருக்கேதீஸ்வரம் அமைந்திருந்த தலத்தில் அமைந்திருந்தது என சில அறிஞர்களும், மன்னார்த்தீவில் உள்ள பேசாலைக்கும், தலைமன்னாருக்கும் இடையில், வடக்குப் பக்கத்தில் கடலை ஒட்டி அமைந்திருந்தது என சில அறிஞர்களும் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருக்கேதீஸ்வரம் சிவன் கோயில் அமைந்திருந்த தலத்தில் 1925 ஆம் ஆண்டளவில் அகழ்வாராய்ச்சிகள் மேற்கொண்டபோது கிடைக்கப் பெற்ற சோழர்காலக் கல்வெட்டு ஒன்றின் மூலமாக "திருவிராமீஸ்வரம்" எனும் சிவன் கோயில் ஒன்று இப்பகுதியில் அமைந்திருந்தமை பற்றித் தெரிய வந்தது.




*அக்கரையில் இராமேஸ்வரமும், இக்கரையில் திருவிராமேஸ்வரமும், மத்தியில் இராமர் பாலத்தின் சுவடுகளும்*

பொ.ஆ. 11 ஆம் நூற்றாண்டில் சோழர் காலத்தில் மன்னார்த் தீவில் திருவிராமேஸ்வரம் பெரிய கோயிலாகக் கட்டப்பட்டது. இராஜேந்திர சோழன் காலத்தில் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றில் இவ்வாலயம் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதில் '"திருவிராமேஸ்வரமுடைய மகாதேவன் கோயில்" எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதோட்டக் கோயில்களை அழித்து கோட்டைகள் கட்டிய போர்த்துக்கேயர்

சோழர் காலத்தில் சீரும் சிறப்பும் பெற்று விளங்கிய இவ்வாலயம் பொ.ஆ. 1560 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரத்தை அழித்த போர்த்து க்கேய நாசகாரர்களால் இதே காலத்தில் இடித்தழிக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. இதன் இடிபாடுகளைக் கொண்டே இவர்களால் பல கோட்டைகள் கட்டப்பட்டன.

போர்த்துக்கேயரால் வட இலங்கையில் கட்டப்பட்ட கோட்டைக ளில் சிறிய கோட்டையானாலும் அதிக கற்களைக் கொண்டு கடலின் நடுவில் கட்டப்பட்டதே "ஹம்மன்ஹில்"கோட்டையாகும். இக்கோட்டை கட்டுவதற்கு யாழ்ப்பாணத்தில் இடிக்கப்பட்ட பல கோயில்களின் கற்க ளும், கற்தூண்களும் பயன்படுத்தப்பட்டன. அதேவேளை மாதோட்டக் கோயில்களின் கற்களும் பயன்படுத்தப்பட்டமை தெரியவருகிறது.

திருக்கேதீஸ்வரம் பற்றிய ஒரு கல்வெட்டும் இக்கோட்டையில் கண்டெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. இதன் மூலம் மாதோட்டக் கோயில்களின் தூண்களும், கற்களும் மன்னார்க் கோட்டை கட்டுவதற்கு மட்டுமல்லாது யாழ்ப்பாணப் பகுதியில் கோட்டைகள் கட்டவும் பயன் படுத்தப்பட்டுள்ளன எனத் தெரிகிறது.

## கோயில் நகரம் மாதோட்டம்

மாதோட்டத்தில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் போது கோயில்களின் கட்டிட பாகங்களும், கற்தூண்களும் கண்டு பிடிக் கப்பட்டன. மாந்தை நகரத்தை ஆய்வு செய்த ஆய்வாளர்கள் இது முன்னர் பல கோயில்களைக் கொண்டிருந்த கோயில் நகரமாக இரு ந்திருக்க வேண்டும் எனக் கருதுகின்றனர். மேலும் இச்சிவாலயத்தை அமைத்த இராஜேந்திரச் சோழனின் பிரதிநிதி காசியிலிருந்து சிவலிங் கமொன்றை வரவழைத்து பிரதிஸ்டை செய்து வழிபட்டதாகவும் அறியக் கூடியதாக உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மாதோட்டப் பகுதியில் இருந்த மூன்று தொல்லியல் மையங்கள்

ஆங்கிலேய ஆய்வாளர் நிக்கலஸ் அவர்களால் 1963 ஆம் ஆண்டு மன்னார் பகுதியில் நடத்தப்பட்ட ஆய்வுகளின் போது இங்கு மூன்று பண்டைய தொல்லியல் மையங்கள் மண்ணுள் புதையுண்டு கிடந்துள்ளமை கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இவற்றில் முதலாவது தற் போதைய திருக்கேதீஸ்வர ஆலயத்தை அண்டிய பகுதியாகும். இரண் டாவது மாதோட்டம் எனும் பண்டைய துறைமுகம் அமைந்திருந்த பகுதியாகும். மூன்றாவது மன்னார்த் தீவின் வடமேற்கில் பேசாலைக்கும், தலைமன்னாருக்கும் இடைப்பட்ட கடலை ஒட்டிய பகுதியாகும். இந்த மூன்றாவது பகுதியே திருவிராமீஸ்வரம் அமைந்திருந்த இடம் எனக் கூறப்படுகிறது.

பண்டைய துறைமுகமான மாதோட்டத்தில், கிறிஸ்துவுக்கு முற் பட்ட காலங்களிலிருந்து சிறப்புடன் விளங்கிய திருக்கேதீஸ்வரத் திருத் தலம் அமைந்திருந்த பழம்பதியிலே, சோழர் காலத்தில் அவர்களால் பொ.ஆ 11 ஆம் நூற்றாண்டில் அமைக்கப்பட்ட இன்னுமோர் சிவால யமே திருவிராமீஸ்வரம் எனவும் கூறப்படுகிறது.

## சோழர் கட்டிய திருவிராமீஸ்வரம் பற்றிய கல்வெட்டு

புராதன காலத்தில் அமைக்கப்பட்ட திருக்கேதீஸ்வரத்திற்கு அடு த்தபடியாக "தண்டேஸ்வரம்" என்னும் சிவாலயமும் இங்கு அமைக் கப்பட்டிருந்ததாக வரலாற்று நூல்கள் மூலம் அறியக் கூடியதாக உள் ளது. அதன்பின்பு சோழர்காலத்தில் இராஜராஜ சோழன் இலங்கையைக் கைப்பற்றி ஆட்சி செய்த காலத்தில் "இராஜராஜேஸ்வரம்" எனும் சிவாலயம் அமைக்கப்பட்டதாக கல்வெட்டுச் சாசனங்கள் மூலம் அறி யக் கூடியதாக உள்ளது. இராஜராஜன் காலத்தின் பின் சோழ நாட்டை ஆண்ட இராஜேந்திரச் சோழன் காலத்தில் திருவிராமீஸ்வரம் அமை க்கப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராஜேந்திர சோழனின் காலத்தில் "பெருந்தனத்துப் பணிமகன் சிறுகுளத்தூருடையான் தேவன்" என்பவனால் பொறிக்கப்பட்ட கல்வெட்டொன்றின் மூலம் திருவிராமீஸ்வரம் பற்றிய தகவல்கள் கிடைத்துள்ளன. 1923 ஆம் ஆண்டு திருக்கேதீஸ்வரத்தில் மேற்கொண்ட அகழ்வின் போது கிடைக்கப்பெற்ற இக்கல்வெட்டு தற்போது கொழும்பு தேசிய தொல்பொருள் அருங்காட்சி சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

**No. 1414.**

*(A.R. No. 618 of 1912).*

ON A PILLAR IN THE SAME PLACE.

1 ஸ்வஸ்தி ஸ்ரீ[||*] திரு-
2 மன்னி வளர இ[ரு]-
3 நிலமடந்தையு-
4 ம் போ[ற்]செயப்பா-
5 வை[யுஞ்] சீர்த்த-
6 னிச் செல்வி[யுந]-
7 ன [பெ]ருந் தேவியரா-
8 கி இன்புற நெ[டு]தியல்
9 [ஊழியு]ள் இடது[றை]-
10 நாடும் துடர்வ-
11 னவேலிப் படர்[வ]-
12 னவா[சியு]ஞ்-
13 சுள்ளிச் சூழ் மதி-
14 ட்கொள்[ளி]ப்பாக்-
15 கையும் [ந]ண்ண-
16 ற்கருமுரண் [ம]ண்-
17 ணைக்கட[க்கமும்] பொரு [க]-
18 டலீழத்[தரச]ர்த மு-
19 டியு மரக்[க]வர் தே-
20 [வியோ ரோங்]கெழில்
21 முடியும் முன்னவர்-
22 பக்க[ற்] தென்னவர்
23 வைத்[த சு]ந்த[ர முடி]-
24 [யும்] இந்[தி]ரனாரமும்
25 [தென்திசை] ஈழம-
26 [ண்]டல [முழுவ]தும் எ-
27 . . . . [கொண]ன்[1]


ON ANOTHER FACE OF THE SAME PILLAR.

1 ஸ்வஸ்திஸ்ரீ[||*] திரு[வி]-
2 ராமீஸ்வரமுடைய மா-
3 காதேவர் . . எழு-
4 ந்தருளும் இடைவா-
5 [ய]த்தேவர் ராஜேந்-
6 . . மாதோட்டமான
7 [ரா]ஜராஜபுரத்து
8 திருவிராமீஸ்வரமு-
9 டைய மஹாதேவர்க்-
10 கு உடையார் ஸ்ரீரா-
11 [ஜே]ந்த்ரசோழதேவர்
12 [பெ]ருந்தநத்துப் ப-
13 ணிமகன் சிறுகுளத்-
14 தூருடையான் . . .
15 . . தேவன் சந்தி . .
16 மானடி[க்கு] . . .
17 நிமந்தமாவது
18 மேற்படியூர் சங்க-
19 ரப்பாடியார்வசம் குடு-
20 த்த காசிரண்டு மேற்-
21 [ப]டி வெற்றிலை
22 வாணியர் வசம் குடு-
23 த்த காசொன்று மே-
24 ற்படியார் வாழைக்காய்-
25 வாணியர்வசம் கு-
26 டுத்த காசொன்று
27 ஆகக் காசு காது
28 காதுக்கும் நின்றி
29 றையாக சந்திவி[1].

திருவிராமேஸ்வரம் கல்வெட்டில் உள்ள இராஜேந்திர சோழனின் மெய்கீர்த்தி மற்றும் கோயில் பற்றிய விபரங்கள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கொழும்பு தேசிய அருங்காட்சியகத்தில் காணப்படும் திருவிராமேஸ்வரம் கல்வெட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருவிராமேஸ்வரம் பற்றிய கல்வெட்டு முதன் முதலாக 1923 ஆம் ஆண்டு தென்னிந்திய கல்வெட்டாய்வாளரான பேராசிரியர் கிருஷ்ண சாஸ்திரி அவர்களால் வாசிக்கப்பட்டு, அது பற்றிய விபரங்கள் அதே ஆண்டில் அவர் பதிப்பித்த "தென்னிந்திய கல்வெட்டுகள்-பாகம் 4" ல் வெளியிடப்பட்டது.

## இராஜேந்திர சோழன் இலங்கை முழுவதையும் வெற்றி கொண்டமை பற்றிக் கூறும் மெய்கீர்த்தி கல்வெட்டு

இக்கல்வெட்டு ஒரு கற்றூணில் இரண்டு பக்கங்களில் பொறிக்கப் பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் இராஜேந்திர சோழனின் மெய்கீர்த்தியும், அடுத்த பக்கத்தில் திருவிராமேஸ்வரம் பற்றிய செய்தியும் எழுதப் பட்டிருந்தது. இராஜேந்திரனின் மெய்கீர்த்தி பகுதியில் அவன் இலங்கை முழுவதையும் வெற்றி கொண்டமை பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது. இலங்கை முழுவதையும் சோழர் வெற்றி கொண்டமை பற்றிய செய்தி இலங்கையில் உள்ள இரண்டு கல்வெட்டுக்களில் மட்டுமே பொறிக்கப் பட்டுள்ளது. ஒன்று பெரியகுளம் கல்வெட்டு. அடுத்தது திருவிராமேஸ் வரம் கல்வெட்டு. அந்த வகையில் இக்கல்வெட்டு இலங்கையில் காணப் படும் கல்வெட்டுக்களில் முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

இக்கல்வெட்டில் திருவிராமீஸ்வரமுடைய மகாதேவனர் கோயிலுக்கு இராஜேந்திர சோழனின் பிரதிநிதி ஒருவன் சந்தி விளக்குகள் எரிப்பதற்கு செய்த ஏற்பாடுகள் பற்றிய தகவல்கள் உள்ளன. இத்தர்ம காரியத்தின் பொருட்டு மூன்று வணிகக் கணங்களிடம் காசுகள் ஒப்ப டைக்கப்பட்டது பற்றியும், இக்காசுகளில் நகரத்தார் என்போரின் பிரி வினரான சங்கரபாடியரிடம் இரண்டு காசும், வெற்றிலை வாணிபரிடம் ஒரு காசும், வாழைக்காய் வணிபரிடம் ஒரு காசும் முதல் இருப்புப் பணமாகக் கொடுக்கப்பட்டதாகவும், இப்பணத்தின் மூலம் கிடைக்கும் வட்டியைக் கொண்டு இக்கோயிலில் சந்தி விளக்கு எரிப்பதற்கான பொறுப்பை இவ்வணிகக் கணங்கள் மூன்றும் ஏற்றிருந்ததாகவும் இக் கல்வெட்டு செய்தி தெரிவிக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிராமீஸ்வரம் கல்வெட்டு பற்றி பேராசிரியர் பத்மநாதன்

திருவிராமீஸ்வரம் பற்றிக் கூறும் கல்வெட்டு தொடர்பான விபரங்களை பேராசிரியர் பத்மநாதன் தனது நூல்களில் குறிப்பிட்டுள்ளார். இக்கல்வெட்டு முன்பு தென்னிந்திய கல்வெட்டு ஆய்வாளரான கிருஷ்ண சாஸ்திரி அவர்களால் வாசிக்கப்பட்டதாகவும், 2006ஆம் ஆண்டு இக்கல்வெட்டு மீண்டும் தம்மால் வாசிக்கப்பட்டதாகவும், இது திருக்கேதீஸ்வரத்தில் கிடைத்துள்ளபடியால் இக்கோயிலும் அத்திருத்தலத்தில் அமைந்த ஒன்றாக இருக்கலாம் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். இக் கல்வெட்டில் திருவிராமேஸ்வரம் பற்றிய வாசகங்கள் பின்வருமாறு,

1. ஸ்வஸ்தி ஸ்ரீ திரு(வி)
2. ராமீஸ்வரமுடைய-ம
3. ஹா தே வர்_எழு
4. ந்தருளும் இஷவா
5. (ஹ) நா தேவர் எழுந்த
6. (ருளிய) மாதோட்டமான
7. ராஜராஜபுரத்து
8. திருவிராமீஸ்வரமு
9. டைய மஹா தேவர்க்
10. கு உடையார் ஸ்ரீ ரா
11. (ஜே)ந்த்ர சோழ தேவர்
12. (பெ)ருந்தனத்துப் ப
13. ணிமகந் சிறுகுளத்
14. தூருடையான் ...
15. ... தேவன் சந்தி ...
16. மானடி (து) ...
17. நிவந்தமாவது
18. மேற்படியூர் சங்க
19. ரப்பாடியார் வசம் குடு
20. த்த காசிரண்டு மேற்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

21. (ப)டி ஊர் வெற்றிலை
22. வாணியர் வசம் குடு
23. த்த காசொந்று மே
24. ற் படி ஊர் வாழைக்காய்
25. வாணியர் வசம் கு
26. த்த காசொந்று
27. ஆகக் காசு நாலு
28. நாலுக்கும் நின்றி
29. றையாக சந்திவி....

இவ்வாறு 29 வரிகளில் எழுத்துக்கள் காணப்படுகின்ற போதும் கல்வெட்டு குறிப்பிடும் செய்தி முற்றுப்பெறவில்லை. எனவே இதன் கீழ்ப்பகுதியிலும் கல்வெட்டின் எஞ்சிய பகுதி பொறிக்கப்பட்டிருக்கும். ஆனால் அப்பகுதி உடைந்து காணாமல் போய் விட்டதால் அவை பற்றிய விபரங்கள் தெரியவில்லை.

## திருவிராமேஸ்வரம் கோயில் பற்றிய பேராசிரியர் பத்மநாதனின் குறிப்பு

மாதோட்டத்தில் அமைந்திருந்த திருவிராமேஸ்வரம் பற்றி பேராசிரியர் எஸ்.பத்மநாதன் தனது நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார். "அருண்மொழித்தேவ வளநாட்டு மாதோட்டமான இராஜராஜபுரத்தில் இராஜராஜேஸ்வரம், திருவிராமேஸ்வரம் என்னுமிரு கோயில்கள் அக் காலத்தில் அமைக்கப்பட்டிருந்தன."

## திருவிராமேஸ்வரம் பற்றிய பேராசிரியர் இந்திரபாலாவின் குறிப்பு

திருவிராமேஸ்வரம் பற்றி பேராசிரியர் இந்திரபாலா தனது நூலில் பின்வருமாறு கூறியுள்ளார். "மாதோட்டத்திலே சோழராட்சிக் காலத்தில் இருந்த இன்னொரு சைவக்கோயில் திருவிராமீஸ்வரமாகும். இக்கோவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லும் பூரணமாக அழிந்து விட்டது. ஆனால் அங்கிருந்த தமிழ்க் கல்வெட்டு ஒன்று நமக்குக் கிடைத்துள்ளது."

## திருவிராமேஸ்வரம் பற்றிய ஏனைய தமிழ் அறிஞர்களின் குறிப்புகள்

திருவிராமேஸ்வரம் பற்றி ஆய்வாளர் சி.எஸ். நவரட்ணம் தனது "A short History of Hinduism in Ceylon" எனும் நூலிலும், "Vanni and the Vanniyas" எனும் நூலிலும் பின்வருமாறு குறிப் பிட்டுள்ளார்.

"The temple in Matota was built by a chola officer named Tali kumaran, and later it was called Rajaraja Isvarattu Mahadevan Koyil. There was another temple in Matota (Rajarajapura) called Tiruvirameswaran Udaiyar Mahadevan Koyil"

திருவிராமேஸ்வரம் பற்றி எஸ்.ஆறுமுகம் தனது "Thiru ketheeswaram" எனும் நூலில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"This temple (Tiruvirameswaram) is different from the Thiruketheeswaram temple alias Raja Raja Iswaram and in all probability built a new by the Cholas. The precise location of this second Chola temple at Thiruketheeswaram, in addition to Rajarajeswaram, had not been fixed."

இலங்கையின் மூத்த பேராசிரியர்களான எஸ். பத்மநாதன் மற்றும் இந்திரபாலா ஆகிய இருவரும் மன்னார் பகுதியில் இருந்த மாதோட்டத்தில் திருக்கேதீஸ்வரத்திற்கு அடுத்தபடியாக திருவிராமேஸ்வரம் எனும் சிவாலயம் இருந்தது என தமது நூல்களில் எழுதியுள்ளமை இங்கே குறிப்பிடத்தக்கது. மேலும் சில தமிழ் அறிஞர்களும் தமது ஆங்கில நூல்களில் இதே கருத்தைக் கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிராமேஸ்வரம் பற்றிய ஆங்கிலேய அறிஞர்களின் குறிப்புகள்

1963ல் மன்னார் பகுதியில் ஆங்கிலேய ஆய்வாளரான நிக்கலஸ் நடத்திய ஆய்வின் போது மூன்று தொல்பொருள் மையங்களைக் கண்டறிந்தார். அவை பற்றிய விபரங்களை அவர் ரோயல் ஆசியா கழக கையேட்டில் பின்வருமாறு எழுதியுள்ளார்.

"On the presence of three mounds signifying buried towns at that time. First was at Thiruketheeswaram, second was at Magana (Port of Margana of Ptolemy,) and A third buried town exists in the Mannar District, on the Mannar island, on the sea shore about halfway between Pesalai and Talaimannar, there are mounds and surface remains extending a little inland from the shore, but part of the town appears to have been submerged by the sea. Nothing is known about the history of this ancient site"

நிக்கலஸ் அவர்களின் இக்குறிப்பின்படி இப்பகுதியில் மூன்று தொல்லியல் மையங்கள் காணப்பட்டுள்ளன. இவற்றில் ஒன்று இன்றைய திருக்கேதீஸ்வரம் இருக்கும் பகுதியாகும். அடுத்தது மாந்தை துறைமுகப் பகுதியாகும். மூன்றாவது மன்னார் தீவில் தலைமன்னாருக்கும், பேசாலைக்கும் இடையில் இருந்த பகுதி என அவர் தனது குறிப்பில் எழுதியுள்ளார்.


நிக்கலஸ் குறிப்பிட்ட மூன்றாவது இடமே திருவிராமேஸ்வரம் அமைந்திருந்த பகுதி என கலாநிதி விக்னேஸ்வரன் கூறியுள்ளார். இவர் எழுதிய "Rock Cave Temple of Thirukoneswaram and Sequelae" எனும் நூலில் இவர் அவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

1672 ல் பிலிப் பல்டியஸ் எனும் ஆங்கிலேய அறிஞர் வரைந்த மன்னார் தீவின் தேசப்படத்திலும் திருவிராமேஸ்வரம் ஆலயம் அமைந்திருந்ததாகக் கருதப்படும் பகுதியில் கோபுரத்துடன் கூடிய ஒரு கட்டிடம் இருந்தது பற்றி குறிப்பிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இக்கட்டிடத்தை அவர் "Pagode" எனக் குறிப்பிட்டிருந்தார். 1965 ல் ஆர்.எல்.புரோகியர் எழுதிய "Seeing Ceylon"எனும் நூலின் முன் அட்டையில் உள்ள இலங்கைப் படத்தில் மன்னார் தீவில், குறிப்பிட்ட அதே இடத்தில் "Pagode" என அடையாளமிட்டுள்ளார்.




**போர்த்துக்கேயர் வரைந்த மன்னார் தீவின் வரைபடத்தில் திருவிராமேஸ்வரம் அமைந்திருந்ததாகக் கருதப்படும் இடம் வட்டமிடப்பட்டுள்ளது.**

1635 ல் போர்த்துக்கேயர் வரைந்த மன்னார் தீவு வரைபடத்தில் தலைமன்னாருக்கும், பேசாலைக்கும் இடையில் திருவிராமேஸ்வரம் ஆலயம் அமைந்திருந்ததாகக் கருதப்படும் பகுதியில் உயரமான எண் கோண கோபுரத்துடன் ஒரு கட்டிடம் இருந்தது பற்றியும், இது வைஷ் ணவ மரபு கோயில்களை ஒத்த கட்டிடம் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




ஒல்லாந்தர் வரைந்த மன்னார் தீவின் வரைபடத்தில் திருவிராமேஸ்வரம் அமைந்திருந்ததாகக் கருதப்படும் இடம் வட்டமிடப்பட்டுள்ளது

இராமர் வானரப் படைகளின் உதவியுடன் கட்டிய பாலம் முடிவடைந்த இக்கரையில் கடலின் ஓரத்தில் வழிபட்ட திருவிராமேஸ்வரத்தை சோழர் சற்று தள்ளி கடற்கரையை விட்டு சிறிது தூரத்தில் கட்டியுள்ளனர். அவ்வாலயத்தையே போர்த்துக்கேயர் இடித்தழித்துள்ளனர். இவ்வாலயத்துடன் மாந்தை துறைமுகத்திற்கருகில் இருந்த திருக்கேதீஸ்வரத்தையும் போர்த்துக்கேயர் இடித்து தரைமட்டமாக்கினர்.

## கிணறு தோண்டும்போது கிடைக்கப்பெற்ற திருவிராமேஸ்வரத்தின் பரிவார மூர்த்தி

திருவிராமேஸ்வரம் சிவன் கோயில் தொடர்பான முக்கிய ஆதாரம் ஒன்று சில வருடங்களுக்கு முன்பு இப்பகுதியில் வெளிப்பட்டுள்ளது. 1995 ஆம் ஆண்டளவில் பேசாலை கடற்கரையை அண்டிய பகுதியில் கிணறு அமைக்க நிலத்தை தோண்டிய போது பழமை வாய்ந்த அம்மன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலை ஒன்று கிடைக்கப் பெற்றுள்ளது. இந்த சிலையைக் கண்டெடுத்த வர்கள் இதுபற்றி கிராம அதிகாரியிடம் தெரிவித்த போது அவர் அதைப்பெற்று அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்ததாகவும், அது பற்றி அறிந்த விடுதலைப் புலிகள் அமைப்பினர் அச்சிலையை எடுத்துச் சென் றதாகவும் தெரிய வருகிறது.

இவ்வம்மன் சிலை இப்பகுதியில் அமைந்திருந்த திருவிராமேஸ் வரம் சிவன் கோயிலின் பரிவார மூர்த்திகளில் ஒன்றான அம்மனின் சிலையாக இருக்கலாம் என எண்ணக்கூடியதாக உள்ளது. ஏனெனில் ஆய்வாளர் நிக்கலஸ் பேசாலையில் கடற்கரையை அண்டி கோயில் அமைந்திருந்ததாகக் குறிப்பிட்டுள்ள பகுதியிலேயே இச்சிலையும் கிடை க்கப் பெற்றுள்ளது. எனவே இச்சிலை நிச்சயமாக திருவிராமேஸ்வரம் சிவன் கோயிலின் முக்கிய வரலாற்றுச் சின்னங்களில் ஒன்றாக இருக்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை.

## திருவிராமேஸ்வரம் ஸ்கந்த புராணத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும் வீரராமேஸ்வரமா?

ஸ்கந்த புராணத்தில் இப்பகுதியில் இருந்த "வீரராமேஸ்வரம் எனும் கோயில் பற்றிக் கூறப்பட்டுள்ளது. ஆனால் அக்கோயில் எங்கு அமைந்திருந்தது என்பது பற்றி இதுவரை எந்தக் குறிப்புகளும் கிடை க்கவில்லை. எனவே இது திருவிராமேஸ்வரமாக இருக்கலாம் எனவும் அறிஞர்கள் கருதுகின்றனர். ஆனால் இது பற்றி இன்னும் ஆய்வுகள் செய்து உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

## திருவிராமேஸ்வரம் மீண்டும் கட்டி எழுப்பப்பட வேண்டும்

இற்றைக்கு 7000 ஆண்டுகளுக்கு முன்பு இராமர் வழிபட்ட சிவலிங்கம் சோழர் காலத்தில் மீண்டும் புதுப்பொலிவு பெற்று விளங்கி, பின்பு போர்த்துக்கேயரால் அழிக்கப்பட்டு சுமார் 450 ஆண்டுகளாக மண்ணுள் புதையுண்டு கிடக்கிறது. சுமார் 350 ஆண்டுகளின் பின் திருக்கேதீஸ்வரம் ஆறுமுக நாவலரின் பெருமுயற்சியால் மீண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டியெழுப்பபட்டது. ஆனால் திருவிராமேஸ்வரம் மீண்டும் கட்டப்பட வில்லை. 450 ஆண்டுகளாக மண்ணுள் புதையுண்டு கிடக்கும், இராமர் வழிபட்ட சிவலிங்கத்தை மீண்டும் சேதுக்கரை எனும் தலைமன்னார் கரையில் ஸ்தாபித்து, ஆலயத்தைக் கட்டி எழுப்ப வேண்டியது இலங்கை இந்துக்களின் தார்மீகக் கடமையாகும்.

இராமர் அக்கரையில் வணங்கிய அடையாளச் சின்னமான இராமேஸ்வரம் இன்று சிறப்புற்று விளங்குவதைப் போல, இராமர் இக் கரையில் வணங்கிய திருவிராமேஸ்வரமும், இக்கரையின் அடையாளச் சின்னமாகவும், இலங்கையில் இந்துக்களின் 7000 வருட சைவ பாரம் பரியத்தைக் கூறும் திருத்தலமாகவும் சிறப்புற்று விளங்க வேண்டும்.

எனவே சோழர் காலத்தில் அவர்களால் சிறப்புடன் வழிபடப்பட்ட திருவிராமேஸ்வரம் எனும் சிவாலயம் அது அமைந்திருந்த இடத்தில் மீண்டும் கட்டப்பட வேண்டும்.

## உசாத்துணை நூல்கள்


1. Rock Cave Temple of Thirukoneswaram and Sequelae-sub section AA -Dr.R.Vigneshwaran- Colombo- 2002- பக். 140,142, 149
2. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள்- பேராசிரியர் சி. பத்மநாதன்- கொழும்பு- 2006- பக்.70,71
3. இலங்கைத் தமிழ்ச் சாசனங்கள் 11- பேராசிரியர் சி. பத்மநாதன்- கொழும்பு- 2013- பக்.92,96
4. இலங்கையில் இந்து கலாசாரம்-பகுதி 1- சி.பத்மநாதன்- இந்து சமய பண்பாட்டு அலுவல்கள் திணைக்களம்- கொழும்பு- 2000- பக்.59,60
5. இலங்கையில் திராவிடக் கட்டிடக்கலை-கலாநிதி கா.இந்திர பாலா- குமரன் பப்பிளிஷர்ஸ்- சென்னை- 1999- (இரண்டாம் பதிப்பு)-பக்.32
6. C.W.Nicholas- JCBRAS-1963- N.S Vol.vi Special number-page 81,82




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. South indian inscription-vol iv- Edited by R.B.H.Kirushna Sastri- Madras- 1923- No. 1414- Page. 496
8. A Short History of Hinduism in Ceylon-C.S.Navaratnam - Jaffna-1964-Page.21
9. Vanni and the Vanniyas- C.S.Navaratnam -Jaffna-1960- Page.36
10. வவுனியா கோயிற்குளம் சித்திவிநாயகர் ஆலயமலர்-பக். 84
11. ஈழத்து இந்து சமய வரலாறு-பக். 157
12. இந்து நாகரீகம்- இரண்டாம் பாகம்- வித்துவான் க. சொக்க லிங்கம்- யாழ்ப்பாணம்- 1996- பக்.94, 156
13. திருக்கேதீஸ்வரம்- வெளியீடு.அகில இலங்கை இந்து மாமன்றம்- பக்.74
14. 1995 ஆம் ஆண்டளவில் பேசாலை கடற்கரையை அண்டிய பகுதியில் கிணறு அமைக்க நிலத்தை தோண்டிய போது பழமை வாய்ந்த அம்மன் சிலை ஒன்று கிடைக்கப் பெற்றதாகவும், இது பற்றி கிராம அதிகாரியிடம் தெரிவித்தபோது அவர் அதைப் பெற்று அரசாங்க அதிபரிடம் ஒப்படைத்ததாகவும், பின்பு அச் சிலையை விடுதலைப் புலிகள் அமைப்பினர் எடுத்துச் சென்ற தாகவும் இப்பகுதி மக்கள் கூறிய தகவல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிராமேஸ்வரம்

## கலாநிதி என்.கே.எஸ்.திருச்செல்வம்



இலங்கையில் சுமார் 400 ஆண்டுகளுக்கு முன்பு போர்த்துக்கேயர் காலத்தில் ஆயிரக்கணக்கான கோயில்கள் அவர்களால் இடித்து அழிக்கப்பட்டன. இவற்றில் அதிகளவான கோயில்கள் வடமாகாணத்தில் இருந்தவையாகும். இக்கோயில்கள் அனைத்தும் ஆங்கிலேயர் காலத்தில் மீண்டும் கட்டப்பட்டன. ஆனால் ஓரிரு கோயில்கள் மட்டும் மீண்டும் கட்டப்படவில்லை. அவற்றில் ஒன்று தான் மன்னார் மாவட்டத்தில் அமைந்திருந்த திருவிராமேஸ்வரம் எனும் சிவாலயமாகும். இக்கோயிலின் வரலாறு மற்றும் அது தொடர்பான சான்றுகள் ஆகியவற்றை உள்ளடக்கிய ஒரு வரலாற்று ஆவணமாக ''திருவிராமேஸ்வரம்'' எனும் இந்நூல் வெளிவருகிறது.

இந்நூலாசிரியரான கலாநிதி என்.கே.எஸ்.திருச்செல்வம் அவர்கள் கிழக்கிலங்கையில், அம்பாறையில் பிறந்தாலும், சுமார் 35 வருடங்களாக தலைநகர் கொழும்பை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்டவர். இவர் இந்தியாவில் தமிழ்நாடு இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி, கோட்டையூர் வெள்ளையத் தேவரின் கொள்ளுப் பேரனும், நல்லமுத்துத் தேவரின் பேரனுமாவார். இவரது பெற்றோரான கல்யாணசுந்தரம்-இராமக்காள் இந்தியாவில் தமிழ் நாட்டையும், இலங்கையில் திருகோணமலையையும் சேர்ந்தவர்களாவர். இவர் சென்னைப் பல்கலைக் கழகத்தில் வரலாற்றுத் துறையில் B.A பட்டம் பெற்றவர். வரலாற்று ஆய்வாளர், தமிழ்த் திரைப்பட ஆய்வாளர் மற்றும் தொகுப்பாளர், எழுத்தாளர், பல சமய-சமூக அமைப்புகளில் உயர் பதவிகளை வகிப்பவர்.

ஆடைத் தொழிற்சாலை ஒன்றில் பொது முகாமையாளராகப் பணியாற்றும் ஆய்வாளர் திருச்செல்வம் வரலாற்றுத் துறையிலும், தமிழ்த் திரைப்படத் துறையிலும் கொண்ட ஈடுபாட்டால் 200 க்கும் அதிகமான வானொலி, தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பங்கேற்று பலராலும் பாராட்டப் பெற்றவர். இவர் கொழும்பு தமிழ்ச் சங்கத்தின் ஆயுள் உறுப்பினராக இருப்பதுடன், இலங்கையில் உள்ள சில சமூக, சமய அமைப்புகளிலும் பொறுப்பான பதவிகளை வகித்து வருகின்றார்.

தமிழர் வரலாறு, வழிபாட்டுப் பாரம்பரியம், தமிழ்க் கலைகள் தொடர்பான ஆழமான அறிவுத் தேடலும், அவற்றைத் தெளிவாக விளக்கும் ஆற்றலும் இருப்பதால் இவர் இலங்கையின் பல பாகங்களில் மட்டுமன்றி, இந்தியா, மலேசியா மற்றும் சிங்கப்பூர் ஆகிய நாடுகளில் இடம்பெற்ற மாநாடுகள் மற்றும் கலந்துரையாடல்களில் கருத்துக்களைப் பகிர்ந்து கொள்ள விருப்புடன் அழைக்கப்பட்ட இலங்கைப் பிரதிநிதியும் ஆவார்.

தமிழர் வரலாறு மற்றும் இந்துசமய பாரம்பரியம் தொடர்பாக இதுவரை 16 வரலாற்று ஆய்வு நூல்களை எழுதிய இவர் தமிழ் மாமணி விருது, நுழைபுலம் ஆய்வு விருது, இலங்கை இலக்கியப் பேரவை விருது, தமிழியல் விருது, வித்தகர் விருது, வரலாற்று ஆய்வு கேசரி விருது, இலங்கேசன் விருது ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார். கடந்த 25 வருடங்களாக இவர் மேற்கொண்ட ஆய்வுப்பணிகளைப் பாராட்டி உலகத் தமிழ் செம்மொழிப் பல்கலைக்கழகம் இவருக்கு கலாநிதி (டாக்டர்) பட்டம் வழங்கி கௌரவித்தது. கலாநிதி திருச்செல்வம் அவர்கள் தொடர்ந்து தேடல் மற்றும் வரலாற்று ஆய்வுகள் மூலமான முடிவுகளைப் பதிவுகளாக்கி, அவற்றால் பயனுறு பணிகள் பல ஆற்றிட வேண்டும் எனப் பாராட்டி வாழ்த்தி மகிழ்கின்றேன்.

பேராசிரியர் க. திலகவதி
M.A, M.Phil, Ph.D (Tamil)
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்
தமிழ்நாடு, இந்தியா

ISBN 978-624-98962-3-9

விலை ரூபா 390.00

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org